## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI

## DEPOSITION OF WITNESS

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**CC.No.26/2021** **DATE : 03.06.2024**

அ.சா.**8**

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர்.மோகன்குமார் | Father's Name | : தியாகராஜன் |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : மகுடஞ்சாவடி | Calling | : மருத்துவர் |
| Religion | : இந்து | Age | : – |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2024.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

<u>முதல் விசாரணை :</u>

1) நான் தற்போது மகுடஞ்சாவடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதுநிலை அரசு உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 08-06-2020 ம் தேதியன்று, இரவு 08.50 மணியளவில் பணியில் இருந்தபோது, செந்தில்குமார், வயது 40, த/பெ.கிருஷ்ணசாமி நாயுடு, என்பவரை அவரது தந்தை மற்றும் அவரது தங்கை ஜீவதுர்கா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்து பின்னர், மேற்படி தேதியில் மாலை 06.30 மணியளவில் சந்தைபேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி இளம்பிள்ளை அருகே இரும்பு ராடால் தன்னை அடையாளம் தெரிந்த 7 நபர்களில் 5 ஆண் நபர்கள் மற்றும் இரண்டு பெண் நபர்கள் தாக்கியதாக கூறினார்.

2) நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு வெளிப்புற காயங்கள் இருந்தன. **காயம் 1)** இடது காலில் 6X4X3 செ.மீ அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. **(சாட்சி விபத்து பதிவேட்டில் தான் எழுதிய குறிப்புகள் படித்து சொல்ல முடியாத நிலையில் உள்ளதாலும், தான் என்ன எழுதியுள்ளேன் என்று தற்போது என்னால் சரிவர சொல்ல முடியவில்லை என்றும் சொல்கிறார். மேலும், விபத்து பதிவேட்டில் எனது கையெழுத்தை தற்போது எனது உடல்நிலையின் காரணமாக நினைவுகூர்ந்து படித்து சொல்ல முடியவில்லை என்றும், ஆனால் அன்றைய தினம் காயமடைந்தவர் உடனடியாக மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு அனுப்பி வைத்துள்ளதாக சொல்கிறார்).**

**(செந்தில்குமார், என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

காயமடைந்தவர் மதுபோதையில் இருந்ததற்கான குறிப்புகள் விபத்து பதிவேட்டில் உள்ளதா என்றால் இல்லை. காயடைந்தவர் மதுபோதையில் தான் இருந்தார் என்றும், என்னால் தான் அதனை நினைவுகூர்ந்து சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக, ஒருவர் நிலைத்தடுமாறி கூர்மையான மின் கம்பத்தின் பகுதியின்மீது விழுந்தால் ஏற்படகூடிய காயமாக காயம் 1) இருக்கலாம் என்றால் வாய்ப்புள்ளது.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

**Witness (Sd)–Palaniappan**

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.